பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 பங்குனி 11 ஜ அவ்வல் 27 இதழ் 40
யாழ்ப்பாணம் புதன்கிழமை 24—3—82

## இரு சமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதல்:
# 48 பேரும் பிணையில்!

(யாழ்ப்பாணம்

யாழ்.நகரில் இரு சமூகங்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்களை யாழ். நீதிவான் ரி. ஜோகநாதன் கடுமையாக எச்சரிக்கை செய்து பிணையில் செல்லும்படி உத்தரவிட்டார்.

யாழ். நகரின் ஒரு பகுதியில் குறிப்பிட்ட இரு சமூகத்தினரிடையே கடந்த வாரம் ஏற்பட்ட பிரச்னை பெரும் மோதலாகஉருவெடுத்தபோது யாழ். பொலிசார் இரு சமூகங்களையும் சேர்ந்த 48 பேரைக் கைதுசெய்து றிமாண்டில் வைத்திருந்தனர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதிவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் இவர்கள் நேற்று ஆஜர் செயயப்பட்டபோது, இப் பிரச்னை சம்பந்தமாக உயர் மட்டத்தில் சமசரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தாக நீதவானின் கவனத்துக்கு, சட்டத்தரணி ஜனுப் ஆர். எம். இமாம் கொண்டுவந்து அவர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

நீதவான், இவர்களை அடுத்த மாதம் 5ம் திகதி நீதிமன்றத்தில் சமூகமளிக்கும்படி உத்தரவிட்டு பிணையில் செல்ல அனுமதி வழங்கினர். (மா

# நாதன் கொலையுண்ட இடத்தில்
# நான்கு 'எஸ். ஜி.' ரக
# வெற்றுத் தோட்டாக்கள்

## மூன்று தடவைகள் துப்பாக்கிவேட்டு; ஒன்பது சன்னங்கள் உடலிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 'நாதன்' என்று அழைக்கப்படும் எஸ். மகேஸ்வரநாதன் நேற்று முன்தினமிரவு சுட்டுக்கொலை செய்யப்பட்டது தொடர்பாக, துப்புத்துலக்கக் கூடிய சில தகவல்களும், சான்றுப் பொருட்களும், பொலிசாருக்குக் கிடைத்திருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.**

கான்ஸ்டபிள் நாதன் கொலை தொடர்பாக நடைபெற்றுவரும் விசாரணைகளிலிருந்து; மிகக் குறுகிய தூரத்திலிருந்தே இவர் சுடப்பட்டுள்ளார் என்றும், 'எஸ். ஜி' ரக தோட்டாக்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன என்றும், உடலின் பின் பகுதியிலேயே துப்பாக்கிச்சூடு விழுந்திருக்கிறது என்றும் தெரியவந்துள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள் நாதன் நேற்றுமுன்தினமிரவு சுமார் 7.45 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு முன்பாக சித்தன்கேணி செல்லும் பாதையில் இனந்தெரியாத நபர்களினல் சுட்டுக் கொலை செய்யப்பட்டது ''ஈழநாடு'' வாசகர்கள் தெரிந்ததே.

### வெற்றுத்தோட்டாக்கள்

கொலையுண்ட கான்ஸ்டபிள் நாதனின் பூதவுடல் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு நேற்றுப் பிற்பகல் பிற்பகல் மூன்றுமணியளவில் அவரது இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

சம்டவம் நடைபெற்ற இடம் நேற்று முன்தினமிரவு ஒன்பதுமணிமுதல் பலத்த தேடுதல் வேட்டைக்குள்ளானது,

சுட்டுக் கொல்லப்பட்ட இடத்திலிருந்து பொலிசார், நான்கு 'எஸ்,ஜி' ரக வெற்றுத் தோட்டாக்களை கண்டெடுத்தனர்.

இதனுடன் அங்கு காணப்பட்ட மூன்று சைக்கிள்களையும், ஒரு செருப்பையும் பொலிஸார் மீட்டனர்.

### ஒன்பது சன்னங்கள்

பிரேத பரிசோதனை நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.


பரிசோதனையின் போது நாதனின் உடலில் இருந்து ஒன்பது சன்னங்கள் எடுக்கப்பட்டன.

துப்பாக்கிச்சூடுகள் உடலின் பின்பகுதி மூலமாக விழுந்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஒரு சூடு பிடரியிலும், இரண்டு சூடுகள் தோள்மூட்டின் கீழும் விழுந்திருப்பதாகப் பிரேதபரிசோதனையின்போது தெரியவந்துள்ளது.

பிரேதபரிசோதனையின் போது ஒன்பது சன்னங்களுடன் ஒரு தோட்டாவின் முன் (முனைப்) பகுதியும் உடலிலிருந்து எடுக்கப்பட்டது.

### அடையாளம் காட்டினர்

கொலையுண்ட கான்ஸ்டபிள் நாதனை, அவரது சகோதரர்



கொலைசெய்யப்பட்ட கான்ஸ்டபிள் 'நாதன்'

எஸ். கிருபைநாதனும் மைத்துனர் குமரேசு கணநாதனும் நேற்று அடையாளம்காட்டினர்.

### பொலிஸ் மரியாதை

நேற்றுக்காலை யாழ். பொலிஸ் அதிபரும், உதவிப் பொலிஸ் அதிபரும் நாதனின் வீட்டுக்குச் சென்று அவரது குடும்பத்தினரிடம் தங்களது அனுதாபங்களைத் தெரிவித்தனர். நாதனின் பூதவுடல் இன்று பிற்பகல் பூரண பொலிஸ் மரியாதையுடன் தகனம் செய்யப்படும். மரியாதை செலுத்தும் பொருட்டு பொலிஸ் 'பாண்ட்' குழுவினரும் இன்று காலை கொழும்பிலிருந்து வருகின்றனர்.

### தேடுதல் வேட்டை

நிலைமை இவ்வாறிருக்க நேற்று முன்தினமிரவு முதல் சித்தன்கேணி பகுதியிலும் சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சுற்றியுள்ள இடங்களிலும் இராணுவத்தினரும் பொலிஸரும் இணைந்து தேடுதல் வேட்டை நடத்தினர்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சமீபமாகவுள்ள சுமார் பத்து வீடுகள் கடுமையான கண்காணிப்புக்குள்ளாகின.

நேற்றுக்காலை எட்டு மணிமுதல் சித்தன்கேணி சந்தியிலிருந்து மாவடிச் சந்திவரை வாசனங்கள் தடைசெய்யப்பட்டு சோதனை நடந்தது. பொலிஸார் சந்தேகிக்கும் பகுதிகளில் தொடர்ந்து திடீர்ச் சோதனைகள் நடைபெற்று வருகின்றன,

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி ஹெட்டியாராய்ச்சி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத் தலைமைக் சாரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எதிரிவிக்சிரம, பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இரத்தினசபாபதி ஆகியோர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## பங்களாதேஷ் உபஜனதிபதி

டாக்கா, மார்ச்.23

பங்களாதேஷின் புதிய உபஜனதிபதியாக ஜனுப் முகமத்துல்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் ஜனதிபதி ஜனுப் அப்துல்சதார் முன்னிலையில் இவர் இன்று உபஜனதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் முன்னர் பாகிஸ்தான் ஜனதிபதியாக ஒருவருடகாலம் பதவிவகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

## 3-வது டெஸ்ட் கிரிக்கெட்
## பாகிஸ்தான்: 1 - 168

லாகூர் மார்ச். 23

இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே லாகூரில் நடைபெற்றுவரும் மூன்றுவது கிரிக்கெட் டெஸ்ட்டின் 3வது நாளான இன்று பாகிஸ்தான் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸ் ஆட்டநேரமுடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 168 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இலங்கைக் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 240 ஓட்டங்களை எடுத்தது. (வெ)

## கொலை, கொள்ளை, தீவைப்பு வழக்கு:
# 16 பொலிஸார்மீது
## பிரசித்த பிடி ஆணை!

(யாழ்ப்பாணம்)

கொலை, கொள்ளை, தீவைப்பு சம்பவங்கள்தொடர்பாக குற்றம்சுமத்தப்பட்ட பதினறு பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேற்று நீதிமன்றத்துக்குச் சமூகமளிக்கத் தவறியதைத் தொடர்ந்து அவர்கள் அனைவர் மீதும் பிரசித்த பிடிஆணை பிறப்பிக்கப்பட்டது.

1981 ஜூன் மாதத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல் காலத்தில், சுன்னுகம், காங்கேசன்துறை பகுதிகளில் கொலை, கொள்ளை, தீவைப்பு சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டி, காங்கேசன்துறை முன்னுள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்தலோமியஸ், சுன்னுகம் முன்னுள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜயதிலகா, சுன்னுகம் பொலிஸ் சார்ஜன்ட் ரஞ்சித் கருணரத்ன மற்றும் பதின்மூன்று பொலிஸ்கான்ஸ்டபிள்கள்

(8ம் பக்கம் பார்க்க)

# பொலிஸார்மீது
## காங்கிரஸ் குற்றச்சாட்டு

சென்னை மார்ச். 23

பாளையங்கோட்டையில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாகப் பொலிசார் அக்கறை எடுத்து விசாரணை நடத்தவில்லைஎன்று இந்திராகாங்கிரஸ் உறுப்பினர் திரு. இளையபெருமாள் சட்டப் பேரவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றை ஒன்றை சமர்ப்பித்தார்.

அமைச்சர் நெடுஞ்செழியன் இதற்கு பதிலளிக்கையில்

(8ம் பக்கம் பார்க்க)

## 'அமிர்' நாடு திரும்பினர்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் லண்டனிலிருந்து நேற்றுக்காலை நாடு திரும்பினர்.

பொதுநலவமைப்பு நாடுகளின் பாராளுமன்ற ஒன்றிய மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக லண்டன் சென்றிருந்த இவர் லண்டனில் மூன்று வாரகாலம் தங்கியிருந்தார்.

இதேவேளை, அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையேயான உயர்மட்டத் தொடர் பேச்சுவார்த்தைகள் இன்றுமாலை தொடர்கின்றன. (இ—ம)

'ராம்சன்ஸ்'
விசேஷ மலிவு விற்பனை
+ TRAVELLING BAGS + SCHOOL BAGS
+ LADIES HAND BAGS
+ SHOPPING BAGS + RAINCOATS
+ PURSES etc.
இடம்: வீரசிங்கம் மண்டபம்.
திகதி: மார்ச் 24 — 25 வரை
காலை 9 மணிமுதல் இரவு 7 மணி வரை
2638

### மணிவாக்கு

வெறும் அதிகாரச் சின்னங்களாகவுள்ள உரிமைகள் அனைத்தும் அழிந்துவிடும்.
— மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## தமிழ் அமைச்சர்கள் தாலாட்டு

"தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பி.க்கள் அரசுடன் இணைந்து தங்கள் ஒத்துழைப்பை நல்கமுன்வந்திருக்கிறார்கள். இந்த முன்மாதிரியை தமிழ் மக்கள் பின்பற்றினால் தமிழர் பிரச்னைகள் அனைத்தும் எளிதில் தீர்த்துவிடலாம்; நாடு அபிவிருத்தியில் முன்னேறும்".

அமைச்சர் தேவநாயகம் இந்த வேண்டுகோளை தேர்தல் பிரசாரப்பாங்கில் பகிரங்கமாகச் சொல்லிவருகிறார்.

இந்தப் பல்லவி பழைய தானாலும் அவருடைய பாட்டில்— தாலாட்டில் — உள்ளிட்ட புதிய வரிகள் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசுடன் இணைந்துஉதவும் ஒத்துழைப்பு.

தமிழ்மக்கள் இவ்விததவறான பிரசாரத்தால் ஏமாந்துபோவதில்லை; இருப்பினும் இன்றுநடைபெறும் அரசு — கூட்டணிப் பேச்சு வார்த்தைகள் பல தப்பான அபிப்பிராயங்களுக்கு ஏதுவாகும்.

தமிழரசுத் தலைவர்கள் இதுபற்றித் தெளிவான கருத்துக்கள் காலத்துக்குக் காலம் வெளியிட்டபோதும் திரைக்குப்பின் இடம்காட்சிகள் நிகழ்ச்சிகள்எத்தன்மையனவோ என்ற சந்தேகம் மக்களுக்கு இருக்கத்தான் செய்யும்.

பாதுகாப்பற்ற வாழ்வுக்குத் தள்ளப்பட்ட தமிழ் சமூகம் அந்த அபாய நிலையில் என்ன அடிப்படையில் நாம் இந்த நாட்டில் தொடர்ந்து உயிர்வாழலாமென்ற மூலக்கேள்வியை அலசி அரசுடன் ஆராய ஆரம்பமானதே இந்தப் பேச்சுக்கள்.

இவற்றின் முடிவைதமிழ் மக்கள் வரவேற்கமுடியுமானால், முடிந்தமுடிவாயில்லாவிட்டாலும், அதன்மூலம் மக்கள் உறுதிகொண்டஇலட்சியத்தை — தம்மைத் தாமேஆளுதல் — அடைய முடியுமானால்அதனைஏற்றுக் கொள்வதில் தவறில்லை. நாட்டில் இன்று அனுபவிக்கும் அவலநிலை எடுத்தஎடுப்பில் நீக்கப்பட்டு எமது உரிமைகள் அனைத்தையும் நாம் பெற்றுவிடுவது அசாத்தியம்.

எனவே இந்த அரசியல் தந்திரம் நிறைந்த பேச்சு வார்த்தைகள்— தமிழர்விடுதலைக்கூட்டணி அரசுடன் ஒத்துழைக்க முன்வந்துவிட்டதென்பது தவறான கருத்து.

அதனிலும் மோசமான கருத்து ஒன்று அமைச்சரின் கோரிக்கையில் தொங்கிக் கொண்டிருக்கிறது. தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரதிநிதிகள் அரசில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். எனவே தமிழ்மக்கள் அரசாங்கத்தை ஆதரிக்கவேண்டும், அரசுக்கு 'ஆமா' சொல்லுங்கள் என்பதே!

அரசியலில் அ, ஆ தெரியாதவர்களும் இந்த உள்ளுடனற்ற வெறும்பிரசாரத்தை நிராகரிப்பது நியாயமே!

நாம்திரும்பவும் வற்புறுத்தக் கடமைப்பட்டகருத்து; இந்த நாடோ, இந்த நாட்டின் மக்களோ ஏதேனுரு அரசியல் கட்சிக்கோ குடும்பத்தினருக்கோ, கூட்டத்தினருக்கோ, கூட்டணியினருக்கோ எழுதுப்பட்டவர்களல்லர். மக்கள் அபிலாஷைகளை தக்கபடி மதித்து அவற்றைப்பெறும் பணியில் சோர்வடைந்தவர்கள் சந்தர்ப்பவாதிகளாக மாறுகிறவர்கள்ஒவ்வொருவரும்மண் கவ்வினதும் எனவே மண் கவ்வுவதும் வரலாற்றில் ஒரு தெளிவான விஞ்ஞான பாடம்:] காரணகாரிய அடிப்படையில் நிகழ்வது.

நாட்டின் அரசியல் மட்டுமல்ல தமிழ் மக்கள் அரசியலும் அதனையே பாடஞ் சொல்லுகிறது.

தமிழ்மக்களின் இழந்த உரிமைகள் — நியாயமான உரிமைகள் பெறுவதற்கு அரசுடன் ஒத்துழைப்பதே அரசியல் ஞானம் என்று கொண்ட அமைச்சர்கள் தங்கள் செயலால் தாங்கள் எடுத்தநிலை சரியென உறுதிப்படுத்தலாம்.

அதனை விட்டு இன்றைய தமிழ் அமைச்சர்கள் தங்களுக்கு முன்னர் இந்தச் சந்தேகமான பணியில் ஈடுபட்டவர்கள் போல அரசுக்குத் துதிபாடி உலக்கை தேய்ந்து உழிப்பிடி போன்ற பொருளற்ற சுலோகத்தில் காலங் கழிப்பது வீண்.

"முந்திய அரசே 'தனிச் சிங்களத்தை'க் கொண்டு வந்து தமிழ் மக்களின் அரசியல் அந்தஸ்தை இழக்ச செய்தது. இன்றைய அரசு தமிழுக்கு மேன்மையான இடம் கொடுத்திருக்கிறது". இதனைவிட இப்பொறுப்பு வாய்ந்த பெரியோர்கள் வேறெதையுஞ் சொல்லவில்லையோ?

தனிச்சிங்களச் சட்டம் நாட்டில் வாழும் தமிழர்களனைவரையும் ஒற்றுமைப்படுத்தி மாபெரும் எதிர்ப்பு இயக்கத்தை உண்டாக்கி வளர்த்து வந்தது.

அந்த இயக்கத்தை முறியடிக்க அரசுகள்கையாண்டு வரும் பிரித்தாளும் தந்திரமே "தமிழ் அமைச்சர்களும்ஆதரவாளர்களும்" என்றுகொள்வது தவறு?

இன்று இந்த எதிர்ப்பு வேகம் குறைந்திருக்கலாம். தமிழ் எம், பிக்கள் பலர் சேவை மூப்பால்களைத்த பிறவிகள். தாமே தனிய இதனை புத்துயிர் கொடுத்து போராட்டத்தை வெற்றிகரமாக முடிப்பது சந்தேகம்.

எது என்னவானால் இச் சட்டம் ஏட்டிலிருக்கும் வரைக்கும் தேசியஒற்றுமை முயற்கொம்பே.

# இலங்கைக் கடலில் மிதக்கும் புத்தகக் கண்காட்சி

உலகின் முதலாவதுமிதக்கும் புத்தகக் கண்காட்சி இப்போது இலங்கைக் கடலில் மிதந்துகொண்டிருக்கிறது.

ஆம், 'லோகோஸ்' என்னும் பெயருடைய கப்பல் புத்தகசாலை தற்போது இலங்கை வந்துள்ளது. கொழும்பு துறைமுகத்தின் எலிஸபெத் மகாராணி இறங்குதுறையில் தரித்துநிற்கும் இக்கப்பலில் இம்மாதம் 20ம் திகதி காலை ஆரம்பமாகிய புத்தகக் கண்காட்சி ஏப்ரல் 6ம் திகதி வரை நடைபெறுகிறது.

சர்வதேச கிறிஸ்தவ இளைஞர் சேவைத்திட்டத்தின்கீழ் பிரிட்டனில் இயங்கிவரும் கல்விப் புத்தகக்கண்காட்சி நிறுவனத்திற்குச் சொந்தமான இக்கப்பலில் தற்போது நடைபெற்றுவரும் கண்காட்சியில் 2500க்கு மேற்பட்ட புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை போன்ற அபிவிருத்திஅடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்த வளரும் சமுதாயத்துக்குப் பயன்தரும் கல்வி, இலக்கிய, விஞ்ஞான, வைத்திய, பொறியியல்துறை புத்தகங்கள் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

ஆரம்பக் கல்விகற்கும் சிறுவர்களுக்குரிய அரியபல புத்தகங்களும் ஆங்கிலம் கற்பதற்கு உதவும் பல புத்தகங்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

கண்காட்சியுடன் விற்பனையும் நடைபெறுகின்றது. திரளான மக்கள் மிக ஆவலுடன் பல புத்தகங்களை கொள்வனவு செய்கின்றனர்.

10 ஆண்டுகளுக்கு மேலாக கல்விச் சேவையில் ஈடுபட்டு வரும் இக்கப்பல் இலங்கைக்கு வந்திருப்பது இது 5வது தடவையாகும்.

1970ம் ஆண்டு சேவையை ஆரம்பித்த இக்கப்பல் இது வரை 60 உலக நாடுகளைச் சேர்ந்த 200 துறைமுகங்களில் தரித்துநின்று புத்தகக் கண்காட்சியை நடத்தியுள்ளது. 30 லட்சத்துக்கு அதிகமான மக்கள் இக்கண்காட்சிகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இலங்கை உட்பட 67 நாடுகளைச் சேர்ந்த 264 பேர் இக் கப்பலில் பணிபுரிகிறார்கள் என்றும் இவர்களில் ஓரிருவரைத்தவிர ஏனையோர் தொண்டர் சேவையே செய்து வருகின்றனர் என்றும் இந்த மிதக்கும் புத்தகசாலையின் அதிபர் கூறுகிறார்.

கடும் உழைப்பாளிகளும் சேவைமனப்பான்மை உடையவர்களுமான ஆங்கிலம் பேசக்கூடிய 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட கிறிஸ்தவ இளைஞர்களுக்கு இக்கப்பலில் 2 வருடங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது என்றும் தமது இச்சேவைக்கு பல நாடுகளைச்சேர்ந்த மக்கள் பண உதவி செய்துவருகின்றனர் என்றும் கூறுகிறார்.

கடலில் மட்டுமல்ல தரையிலும் இந்நிறுவனத்தினர் புத்தகக் கண்காட்சிகளையும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றனர்.

அண்மையில் கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் தாம் நடத்திய புத்தகக் கண்காட்சிகளை பெருந்தொகையான மாணவர்களே ஆவலுடன் வந்து பார்த்தனர் என்றும் வைத்திய, பொறியியல், வியாபார முகாமைத்துவ துறைகளைச் சேர்ந்த புத்தகங்களையே அவர்கள் வாங்கிச் சென்றனர் என்றும் இந்த நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

—காந்தன்

"கூட்டணி இடமளித்தாலும்

# யாழ். மாவட்டசபையில் இனி பதவி ஏற்க மாட்டோம்"

-- ஆனந்தசங்கரி

[பச்சிலைப்பள்ளி]

"யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபையில் கிளிநொச்சிக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கக் கூட்டணித்தலைமைப் பீடம் முன்வந்தாலும், இனிமேல் அதனை நாம் ஏற்கப் போவதில்லை".

இவ்வாறு கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டணி அலுவலகத்தில், கூட்டணி விசாரணைக்குழுவின் முன் பேசுகையில் தெரிவித்தார். இவ் விசாரணைக் குழுவுக்கு சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. என். நவரத்தினம் தலைமை தாங்கினர்.

கிளிநொச்சி எம். பி. இக்குழு முன் தொடர்ந்து உரையாற்றும்போது, "கிளிநொச்சி தனி மாவட்டமாக்கப்படுவதினால் வேறு தொகுதியில் உள்ளவர்களுக்குப் பாதிப்பு இருக்கலாம். ஆனால் நான் அக்கோரிக்கையிலிருந்து மாறுவேனானால் நான் கிளிநொச்சி மக்கள் மத்தியில் துரோகியாக மதிக்கப் படுவேன். (இச் சந்தர்ப்பத்தில் சபையில் உள்ள இளைஞர்கள் நீங்கள் மாறினாலும் நாங்கள் விடமாட்டோம் எனக் கோஷமெழுப்பினர்] மாவட்ட சபைத் தேர்தலில் கிளிநொச்சிக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படாததினால், தனிமாவட்டக் கோரிக்கை எழுந்ததல்ல. தேர்தலைமறந்து ஆறு மாதங்களாகிவிட்டது. மக்கள் கஷ்டங்களை அனுபவிக்கும் போதெல்லாம், கிளிநொச்சி தனிமாவட்டமாக ஏன் இருக்க முடியாது? எனக் கேட்டு வந்துள்ளார்கள். நான் இவ்வளவு காலமும் அவர்களைச் சமாளித்துவந்துள்ளேன்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் என்னை மிகவும் கேவலமாக எழுதியுள்ளதுடன் கீழ்த்தரமான முறையில் ஆசிரியத் தலையங்கத்தையும் தீட்டியுள்ளார்கள். நான் பதவிஆசை பிடித்தவன் அல்ல. அமரர் கதிரவேலுப்பிள்ளையின் பூதவுடல் எரிந்து கொண்டிருந்த போது, நான் திரு அமிர்தலிங்கத்திடம் கூறினேன் "மட்டக்களப்பில் திரு. கணேசலிங்கம் தனித்திருந்து கஷ்டப்படுகிறார். எனவே நான் எனது இடத்தை இராஜினமாச் செய்து திரு காசி ஆனந்தனுக்கு இடமளிக்கிறேன். அவர் மட்டக்களப்பில் சேவையாற்றட்டும். நான் கிளிநொச்சியில் எனது அலுவலகத்திலிருந்து அப்பகுதி மக்களின் அலுவல்களைக் கவனிக்கிறேன் என்று.

விசாரணைக்குழு முன் திரு. கிருஷ்ணராசாவும் உரையாற்றினர். [அ]

# 'கட்சிக் கட்டுப்பாட்டுடன் உறுப்பினர் இயங்கவேண்டும்'

-- பண்டிதர்

[பச்சிலைப்பள்ளி[

"கட்சி உறுப்பினர்கள் கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். தான்தோன்றித்தனமாக எடுக்கும் முடிவுக்குத் தலைமைப்பீடம் பொறுப்பல்ல. அமைச்சர் இராசதுரைக்கு எதிராக நான் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் போவதாகக் கூறியுள்ளபோதிலும், நான் சார்ந்திருக்கும் கட்சியிடம் அனுமதி பெற்றுத்தான் அதனைக் கொண்டுவரலாம்."

இவ்வாறு ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கிளிநொச்சி கூட்டணி விசாரணைக்குழுமுன் பேசுகையில் கூறினர்.

"கேட்கும் போதெல்லாம் கூட்டணியின் போராட்டங்களில் கலந்து கொள்ள வருகின்ற இளைஞர் ஒருவர் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்குப் பின்னர் உண்ணாவிரதம் இருந்தபோது தலைமைப்பீடம் கண்மூடித்தனமாக இருந்தது ஏன்?" எனக் கேள்வி எழுப்பினர். இக்குழுமுன் சாட்சியமளித்த இளைஞர் ஒருவர்.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவ்இளைஞனின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றினர். அவர் தொடர்ந்து பேசுகையில் 'தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சாடுவதற்கு வேறு வழியுண்டு. தொண்டர்கள் கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும். தொகுதிக்கிளை உறுப்பினர்கள் தங்கள் குறைகளைப் பொதுச்சபையில் எடுத்துச் சொல்லலாம்'. என்றார்.

கிளிநொச்சித் தொகுதியில் பல்வேறு இடங்களிலுள்ள பொது ஸ்தாபனங்களின் 350க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் விசாரணைக்குச் சமுகமளித்தபோதிலும், நேரம் போதாமையினால் 25 பேர் மட்டுமே சாட்சியமளித்தனர். தனிமாவட்டக் கோரிக்கைக்கு எதிரான கருத்துள்ளவர்கள் யாராவது இருந்தால் சாட்சியமளிக்கலாம் என விசாரணைக் குழுவினர் கேட்டபோது எவரும் முன்வரவில்லை. எனவே அங்கு சமுகமளித்து கையொப்பமிட்ட உறுப்பினர்கள் அனைவரும் இக்கோரிக்கைக்குஆதரவாகக் கருத்து தெரிவித்ததாகக் கொள்ளப்படும் என விசாரணைக் குழுவினரால் அறிவிக்கப்பட்டது. [அ]

# பாரதத்திற்கு பிரி. ஆயுதம்! இந்திரா - தட்சர் ஆலோசனை

லண்டன், மார்ச் 23

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதுபிரிட்டிஷ் ஆயுதங்கள், பாரதத்திற்கு விற்பனை செய்வதுபற்றி ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது இதுபற்றிய விபரங்கள் எதுவும்வெளியிடப்படவில்லை.

பிரான்சும், பிரிட்டிஷும் இணைந்து தயாரித்துவரும் யுத்தவிமானங்களை இந்தியா கொள்முதல்செய்ய விருப்பம் கொண்டுள்ளதாக, இப்பேச்சுவார்த்தையில் தெரிவிக்கப்பட்டதாம். இப்படியான யுத்த விமானங்கள், பாரதத்திடம் ஏற்கனவே உண்டென்றும், மேலும் பல விமானங்களை கொள்முதல்செய்ய பாரதம் விரும்புவதாகவும் கூறப்பட்டதாம்.

இப்பேச்சுவார்த்தை சுமார் ஒருமணிநேரம் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இந்துமா சமுத்திரத்தில்

# அந்நியர் நடமாட்டத்தால் பதட்டநிலைமை

லண்டன், மார்ச் 23

இந்துமா சமுத்திர கடல் பகுதியில் அந்நியர் நடமாட்டத்தினுல் பதட்டநிலை ஏற்பட்டுள்ளதாகவும், பாரதம் எப்பொழுதும், சமாதானத்திற்கே முயற்சித்துவரும் என்றும், லண்டனில் பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரும் சந்தித்துபேச்சுவார்த்தை நடத்தினர்.

இருநாடுகளின் உதவிகள் பற்றியும், வர்த்தக தொடர்பு அதிகரிப்பு பற்றியும், இப்பேச்சுவார்த்தை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

பேச்சுவார்த்தை ஒரே சமயத்தில், வெவ்வேறு நிலையில் இடம்பெற்றன. சர்வதேச பொருளாதாரநிலை, உலகவிவகாரம், ஆப்கானிஸ்தான்,

### இந்திராகவலை

பாகிஸ்தான்நிலைமைபற்றியும், ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நண்பகல் பிரிட்டிஷ் பிரதமர், பாரதப்பிரதமருக்கு விருந்தொன்று அளித்தார்.

இவ்விருந்தின்போது, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் தலைவராக திருமதி இந்திராகாந்தி விளங்குவதாக, பிரிட்டிஷ் பிரதமர் தெரிவித்தார். பாரத நாட்டின் சாதனைகளையும் பிரிட்டிஷ் பிரதமர் பாராட்டினுர்.

இதற்கு பதிலளித்துப்பேசிய பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, பிரிட்டிஷ் மக்களின் நட்புறவை விரும்புவதாகவும். பாரத மக்களின், அன்பையும், நட்பையும், கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தார். (க)

# ஆளில்லா ரயில் கடவைகளில் பாதுகாப்பு

புதுடில்லி, மார்ச் 23

கோலனூரில் நடந்த கடுகதி ரயில்.பஸ்விபத்தில் 60 பேர் பலியானதைத் தொடர்ந்து, ஆளில்லாத ரயில் கடவைகளுக்கு, பணியாட்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோலனூர் ரயில் கடவையில் பணியாள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், ரயில்வே அமைச்சர் திரு. பி. சி. சேட்டி தெரிவித்தார். (க)

# பாக். கோஷ்டியும் கலந்துகொள்ளும்

புதுடில்லி, மார்ச் 23

புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ஆசியவிளையாட்டுப் போட்டியில், 150 பேரைக் கொண்ட பாகிஸ்தான் அணியும்கலந்துகொள்ளவிருக்கிறது தற்போது பாகிஸ்தான் அணியினர் பயிற்சிபெற்றுவருகின்றனர். (க)

# பூமியைச் சுற்றுகிறது 'கொலம்பியா' விண்கலம்

வாஷிங்டன், மார்ச் 23

அமெரிக்காவின் கொலம்பியா விண்வெளிக் கலம் பூமியைச் சுற்றி வலம்வந்து கொண்டிருக்கிறது.

நேற்று கேப் கன்வராவிலிருந்து ஏவிவிடப்பட்ட இவ் விண்வெளிகலம், அத்திலாண்டிக் மாகடல் மேலாக ஒளிவீசியபடி மேலேஎழுந்து சென்றது. இக்கலத்தில்இரு விண்வெளி வீரர் சென்றுள்ளனர்.

சூரியனின் முழு வெப்பத்தை எப்படி தாக்குப்பிடிப்பது பற்றியும், மற்றும் பல விடயங்கள் பற்றியும், இப்பயணம் மூலம் ஆராயப் படவிருக்சிறது.

விண்வெளியில் ஒரு வார காலம் பயணம்செய்யும் இக்கலம், மெக்சிக்கோ விமானத்தளத்தில் இறங்கும். (க)

## 'கொலம்பியா விண்கலம்':

# 18வயது விஞ்ஞானியின் ஆய்வையும் பரீட்சிக்கும்!

கேப்கனவெரல், மார்ச்23

தனது மூன்ருவது நீண்ட விண்வெளிப்பயணத்தை ஆரம்பித்திருக்கும் விண்வெளி விமானமான 'கொலம்பியா'வில் பதினெட்டு வயதான அமெரிக்க உயர்பாடசாலை மாணவனொருவனது விஞ்ஞான ஆய்வொன்றும், விண்வெளியில் பரீட்சித்துப்பார்க்கப்படவிருக்கின்றது.

றெட் நெல்சன் என்ற பெயரையுடைய மின்னசொட்ரா மாநிலத்தைச் சேர்ந்த பதினெட்டு வயதான மேற்படி மாணவனின் ஆய்வு; விண்வெளியில் தேனீக்கள், ஈக்கள் போன்ற சிறு ஜந்துக்கள் எவ்வாறு உயிர்வாழமுடியுமென்பதை அறிவதாகவே அமைந்திருக்கின்றது.

'கொலம்பியா'வில் கொண்டு சென்று பரீட்சித்துப்பார்க்கப்படவிருக்கும் றெட் நெல்சனின் மேற்படி ஆய்வு, தேசிய இளம் விஞ்ஞானிகளுக்கான போட்டியில் வெற்றியீட்டியதொன்ருகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

# இந்திய பாராளுமன்றத்தில் அஞ்சலி

புதுடில்லி, மார்ச் 23

இந்தியாவின் முதுபெரும் அரசியல்வாதியும், காந்தியவாதியுமான அண்மையில் மறைந்த ஆச்சார்ய கிருபளானிக்கு இந்திய லோகசபாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது. (வெ)

## குன்றக்குடி அடிகள் தலைமையில்

# கன்னியாகுமரி மாவட்டத்தில் சமரச முயற்சி

சென்னை மார்ச் 25

கன்னியாகுமரி மாவட்டத்தில் குன்றக்குடி அடிகளார் தலைமையில் 7 கிராமங்களுக்கு ஊடாக அமைதி ஊர்வலம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத்தலைவர்களும் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இங்கென்றும், அங்கொன்றுமாக சில சம்பவங்கள் இடம்பெற்றபோதிலும் பூரண அமைதி நிலவி வருவதாக மாவட்ட ஆட்சி தலைவர் திரு. பிரானெஸ் தெரிவித்தார்.

கடைசியாக நடந்த சம்பவம் தொடர்பாக மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சமயத்தலைவர்கள் பலர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விஜயம் செய்யவிருக்கிருர்கள். கன்னியாகுமரி பகுதியில் 144 தடைச்சட்டம் அமுலில் இருப்பதால் சமயத்தலைவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் முன் அனுமதி பெற்ற பின்னரே விஜயம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1ம் தேதி மண்டைக்காட்டிலும் 15ம் தேதி நிர்மலக்குடியிலும் அதன்பின்பு சில கிராமங்களிலும் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதல்பற்றி தனிநபர் கமிஷன் வேணுகோபால் விசாரணை நடத்துவார் என அரசு அறிவித்துள்ளது.

அப்பகுதியில் ஒரு மாதத்திற்கு முன்பிருந்து நடந்த சம்பவங்கள் பற்றியும் விசாரணை இடம்பெறும். இனிமேல் இப்படியான சம்பவங்கள் இடம்பெறுமல் தடுப்பதற்கான வழிவகைகள் பற்றியும் கமிஷன் அறிக்கையில் தெரிவிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

6 மாத காலத்திற்குள் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [க]

# லண்டன் நகரில் பாரத விழா ஆரம்பம்

லண்டன் மார்ச் 23

பாரத திருவிழா லண்டன் மாநகரில் நேற்று ஆரம்பமானது. லண்டன் றேயல் விழா மண்டபத்தில் நடந்த இவ் விழாவில் பாரத பிரதமர் திருமதி இந்திராகாந்தி பிரதமர் திருமதி தட்சர், வேல்ஸ் இளவரசர் சாள்ஸ் கலந்து கொண்டனர்.

விழா ஆரம்பத்தில் இசையரசி எம். எஸ். சுப்பலட்சுமியின் இசைக்கச்சேரியும், ரவிசங்கரின் சித்தார் இசையும் இடம்பெற்றன.

மண்டபத்தில் சுமார் 3000 பேர் திரண்டிருந்தனர். நவம்பர் மாத இறுதி வரை இவ் விழா நடைபெறவிருக்கிறது. பாரத கலைஞர்களின் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

றேயல் அக்கடமியில் 27 ஓவியர்களினதும், 11 சிற்பிகளினதும் பொருட்காட்சி ஒன்றும் இடம்பெறவிருக்கிறது. (க)

# "பரம்பரை வைத்தியர்களைப் பதிவுசெய்யும் திட்டத்தை ரத்துச்செய்யவேண்டாம்!"

## வ. இ. சித்த ஆயுர்வேத வைத்தியர் சம்மேளனம் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

''பரம்பரை வைத்தியர்களை ஆயுர்வேத வைத்தியர்களாகப் பதிவுசெய்யும் திட்டத்தை நிறுத்தி, அதற்குப் பதிலாக வைத்திய சாஸ்திரப் பட்டப்படிப்புத் தராதரம் பெற்றவர்களை வைத்தியர்களாகப் பதிவுசெய்யும் புதிய திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது வைத்திய சாஸ்திர பட்டப்படிப்பிற்கான பாடத்திட்டம் சிங்கள மொழியில் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள போதிலும் தமிழ்மொழியில் சாஸ்திரப் பட்டப்படிப்புக்கான பாடத் திட்டம் எதுவும் இது வரை ஆயுர்வேதத் திணைக்களம் அறிமுகப்படுத்தவில்லை. இந்நிலையில் பரம்பரை வைத்தியர்களைப் பதிவுசெய்யும் திட்டத்தை நிறுத்துவது எமது தமிழ்ப் பகுதிகளில் உள்ளவர்களைப் பெரிதும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை.''

இவ்வாறு வட இலங்கைச் சித்தஆயுர்வேதவைத்தியர்கள் சம்மேளனத்தின் விசேட செயற்குழுக் கூட்டம், யாழ். லங்கா சித்தஆயுர்வேத வைத்தியக்கல்லூரியில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு பேசுகையில் சம்மேளனத்தின் செயலாளர் டாக்டர் எம். எஸ். சுந்தரம் குறிப்பிட்டார்.

பரம்பரை ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவுசெய்யும் முறையை ரத்துச்செய்யும் அரசின் திட்டம் பற்றி ஆராய்வதற்காக நடத்தப்பட்ட இக்கூட்டத்திற்குச் சம்மேளனத்தின் தலைவர் வைத்தியசிரோன்மணி எஸ். பி.ஈ.இன்னுசித்தம்பி தலைமை வகித்தார்.

வைத்திய சாஸ்திரப் பட்டப் படிப்பின் தமிழ்மொழிப் பாடத் திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்து நடைமுறைப்படும் வரை பரம்பரை வைத்தியர்களைப் பதிவுசெய்யும் திட்டத்தைக் கைவிடவேண்டாம் என்று ஆயுர்வேத அமைச்சரையும், ஆயுர்வேத ஆணையாளரையும் கேட்டுக்கொள்ளும் முக்கிய தீர்மானம் ஒன்றும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சிங்கள மொழியிலான பாடத் திட்டத்தைப்போலத் தமிழ்மொழியில் புதிய பாடத் திட்டம் ஒன்றைத் தயாரித்து ஆயுர்வேத அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்காக மூவர் அடங்கிய விசேட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இக்குழுவில் யாழ் லங்கா ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி அதிபர் திரு. ஏ. வி. இராசரத்தினம், வட இலங்கைச் சுதேச வைத்திய சபையின் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி, கல்லூரி விரிவுரையாளர் திரு. கே. சிவப்பிரகாசம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## பாக். தேசிய தினம்:

# 8கட்சிகள் எதிர்ப்பு: தலைவர்கள் கைது

கராச்சி மார்ச் 23

பாகிஸ்தானில் நடைபெறும் தேசிய தினத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக்கைகளில் 8 எதிர்க்கட்சிகள் இணைந்து ஈடுபட முயன்றதனுல் முன்னெச்சரிக்கையாக பல எதிர்க்கட்சித்தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

முன்னுள் பிரதமர் பூட்டோவின் மந்திரிசபையில் இடம் பெற்ற முன்னுள் அமைச்சர் முகமட் கானும் இடதுசாரி தலைவர் அலிகானும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பத்திரிகைகள் அரசியல் விவசாரங்கள் குறித்து எவ்வித செய்திகளும் வெளியிடக்கூடாது என பாகிஸ்தான் ஜனுதிபதி தடைவிதித்துள்ளார்.

பத்திரிகைகளில் அரசியல் விவகாரங்கள் பற்றிய செய்திகள் வெளியிட்டால் 5 வருட காலத்திற்கு பத்திரிகைகள் வெளியிடுவது தடைசெய்யப்படலாம் என்றும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார், [க]

# "சுருட்டுத் தொழிலாளர் மீதான குற்றச்சாட்டு: பொலிஸில் விசாரணை

## பதினொருபேரும் எச்சரிக்கை செய்யப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுருட்டு முதலாளிமார் சங்கத் தலைவர் ஒருவரைச் சுருட்டுத் தொழிலாளர் கோஷ்டி தாக்கிக் காயம் விளைவித்ததாகவும், முதலாளி ஒருவரின் வீட்டைச் சேதப்படுத்தியதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையில், புகாரில் தெரிவிக்கப்பட்டிருந்த பதினொரு தொழிலாளர்களும் சட்டத்தரணி ரி. சோமசுந்தரத்தின் அனுசரணையுடன் ஆஜரானபோது யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அதிபர் திரு எஸ். நவரத்தினராஜா பதினொரு பேரையும் எச்சரிக்கை செய்தார்.

இவ் விசாரணையின் போது தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கமும் சம்பந்தப்பட்ட முதலாளிமார் ஏழு பேரும் ஆஜராகியிருந்தனர்.

தொழிலாளர்கள் தமது உரிமைகளைக்கோருவதற்குஉரிமை உண்டு என்றும், ஆனல் வன்செயல் மூலம் உரிமைபெற முன்வரக் கூடாதென்றும், முதலாளிமார் தொழிலாளரின் சம்பளத்தைக் குறைக்கும்பட்சத்தில் சங்க மூலம் பேச்சுவார்த்தை நடத்திச் சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்றும் உடைமைகளுக்குச் சேதம் விளைவிக்கக் கூடாதென்றும் உதவிப் பொலிஸ் அதிபர் எச்சரித்தார்.

முதலாளிமாரும் தொழிலாளரின் சம்பளத்தைக் குறைப்பது நீதியல்லவென்றும் உதவிப் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

சுருட்டுத் தொழிலாளர் சம்பந்தப்பட்ட எந்த உரிமைக்கும் தொழிற்சங்க ரீதியாகவே போராடி வருவதாக திரு, ஆ. துரைராஜசிங்கம் தெரிவித்தபோது, தொழிலாளர் விஷயத்தில் தலையிட தொழிற்சங்கத்துக்குச் சட்டப்படி பூரண உரிமை உண்டென்று உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராஜா தெரிவித்தார்.

### மன்னிப்பு வழங்கப்பட்ட

# சிறைக்கைதிகள்

## மீண்டும் கைவரிசை!

(கொழும்பு)

கடந்த அக்டோபர் மாதம் எலிஸபெத் மகாராணியார் இலங்கைக்கு விஜயம் செய்ததையிட்டு மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சிறைக் கைதிகளில் மூவர் பிரபல வர்த்தக நிறுவனமான மூஸாஜி நிறுவனத்தில் 50,000 ரூபாவைக் கொள்ளையடித்து மீண்டும் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இக்கொள்ளையர்கள் மூவரும் துப்பாக்கி முனையிலேயே மேற்படி தொகையைக் கொள்ளையடித்துள்ளனர்.

கொழும்பு பொலிசார்குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதுடன், நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இவர்களைக் கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்குற்றவாளிகள் மூவரும் ஏற்கனவே குற்றம் புரிந்தமைக்காகச் சிறைத் தண்டனை அனுபவித்து வந்தனரென்றும் மகாராணியாரது இலங்கை விஜயத்தை முன்னிட்டேஇவர்களுக்கு கருணை காட்டி விடுதலை வழங்கப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது.

இம் மூன்று குற்றவாளிகள் பற்றி ஏற்கனவே பொலிசாரிடம் தடயங்களும் அடையாளங்களும் இருப்பதனுல் விரைவில் இவர்களைக் கைது செய்ய முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது. [கி]

### ப. நோ. கூ. சங்க பணமோசடி

## வழக்கு ஒத்திவைப்பு

[மாவிட்டபுரம்]

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இரும்புப் பொருள் விற்பனை நிலைய மோசடி தொடர்பாக அதன் மனேஜர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டதையடுத்து அவர் தாம் சுத்தவாளிஎனக் கூறியதால் வழக்கு விசாரணை ஒத்திப்போடப்பட்டது.

சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இரும்புப்பொருள் விற்பனை நிலையத்தில் ஒரு லட்சத்து 27ஆயிரத்து 991 ரூபா பணத்தை மோசடி செய்ததாக அதன் மனேஜராக இருந்த தெல்லிப்பளையைச் சேர்ந்த கணபதி வேலாயுதம் என்பவர்மீது குற்றம் சாட்டி யாழ். விசேஷ குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிசாரால் இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தாம் சுத்தவாளி என எதிரி கூறியதையடுத்து வழக்குவிசாரணை ஜூலை 19ம் திகதிக்கு நீதிபதி திரு, சீ. வி. விக்னேஸ்வரன் ஒத்திவைத்தார்.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே.செல்வரத்தினம் திருமதி மோகாந்தி பீரிஸ் ஆகியோர் ஆஜராகினர். (அ)

### ரூ.10,000 பெறுமதி

## வலம்புரிச்சங்கு

(மன்னார்)

எருக்கலம் பிட்டியைச் சேர்ந்த சுழியோடி ஒருவருக்கு கடந்த சனிக்கிழமை சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வலம்புரிச்சங் கொன்று கிடைத்ததைத் தொடர்ந்து எருக்கலம் பிட்டியில் சங்கு சேகரிப்போரின் தொகை அதிகரித்துள்ளது.

எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த எஸ்.எஸ். எம். ஏ. லத்தீப் என்பவருக்கே 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வலம்புரிச்சங்கு கிடைத்துள்ளது.

## குடும்பக்கட்டுப்பாட்டுத் திரைப்படம்

(கொழும்பு)

ஜப்பான் குடும்பக்கட்டுப்பாட்டு நிறுவனம் இலங்கை அரசின் உதவியுடன் குடும்பக் கட்டுப்பாடு, சுகாதாரத்துறை பற்றிய திரைப்படமொன்றைத் தயாரிக்கவிருக்கிறது,

இதற்கென ஜப்பான் குழு ஒன்று அடுத்த மாதம் இங்கு வரவிருக்கிறது. செப்டம்பரில் நடைபெறவிருக்கும் ஆசிய மாநாட்டில் இத்திரைப்படம் காண்பிக்கப்படும். (க)

### காரை. சுந்தரமூர்த்தி

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இம் மாதம் 27—ந் திகதி அதிபர் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்வைபவத்தில் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா கல்லூரிக் கொடியை ஏற்றுவார். திருமதி க. திருநாவுக்கரசு பரிசில்களை வழங்குவார். (க)

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடி வீதி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் புதுவருட உத்தியோகஸ்தர்கள் தேர்வில் பின்வருவோர் நடப்பு ஆண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

தலைவர்; திரு. மு. கனகரத்தினம், உபதலைவர்; திரு. செ. சற்குணராசா, செயலாளர்; திரு. கி. குமாரசாமி, உபசெயலாளர்: திரு. சி. சண்முகதாஸ், பொருளாளர்: திரு. க. அரசரத்தினம், கணக்குப் பரிசேச்தகர்: திரு. கு. நற்குணராசா, விளையாட்டுச்செயலாளர்: திரு. இ. ரவீந்திரராயூ, கலைச்செயலாளர்; திரு. மு. ரவீந்திரராசா, போஷகர்கள்: திருவாளர்கள் ச. இராசையா, சி. பத்மநாதன், சி. சின்னராசா, உறுப்பினர்கள்: திருவாளர்கள்: சு. பரமநாதன், செ. ஜீவராசா, த. சண்முகராசா, வ. கணேசலிங்கம், மா. பசுபதி, நிலைய பொறுப்பாளர்: திரு. தெ. ஜெயந்தன்.

## உயிர் நீத்த பொலிசார்: ஆலயங்களில் வழிபாடு

[மாவிட்டபுரம்]

கடமையின்போது உயிர் நீத்த பொலிசாரின் ஆத்மசாந்திக்காக காங்கேசன்துறைப் பொலிசார் மூன்று மத ஆலயங்களில் வழிபாடு செய்தனர்.

பொலிஸ் நிலையத்ருற்குமுன்பாக உள்ள வைரவர் ஆலயத்திலும், காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையிலும் ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்திலும் விசேட பூசை வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றில் பொலிசார் கலந்து சொண்டனர். பொலிஸ் நிலையத்தில் மௌனப் பிரார்த்தனையிலும் சகல பொலிசாரும் ஈடுபட்டனர்.

## குடிபோதையில் தற்கொலை

(சாவகச்சேரி)

வண்ணுங்கேணியைச் சேர்ந்த சின்னத்தம்பி தணிகாசலம் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இவர் கிருமிநாசினி அருந்தியதும் பளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானுர்.

சாவகச்சேரி மரண விசாரணை அதிகாரி திரு.என். தர்மேந்திரன் விசாரணையை நடத்தினுர்.

மனைவி அன்னம்மா சாட்சியமளிக்கையில் கணவன் குடிபோதையில் தன்னேடு வந்து சண்டை பிடித்ததாகவும், பின் கிருமிநாசினி அருந்தியதாகவும் தெரிவித்தார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. தர்மேந்திரன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். [கு]

காப்புறுதிக்கு

எய்ற்கன் ஸ்பென்ஸ்

நிகரற்ற சேவைக்கு நெடுங்காலப் புகழ் பெற்ற நிறுவனம்

106 ஆண்டுகளுக்கும் மேலாக, லண்டன் வொயிட்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகளாகப் பணியாற்றிய எய்ற்கன் ஸ்பென்ஸ் இலங்கையில், காப்புறுதித் துறையின் முன்னேடி.
ஒரு நூற்ருண்டுக்கும் மேற்பட்ட இந்தக் காலத்தில்,
சேவைக்கும் நம்பிக்கைச் சிறப்புக்கும் புகழ் பெற்ற
நிறுவனமாகப் பெயர் பெற்று விட்டோம்.
நேர் நிகரற்ற இந்த அனுபவத்தை, தற்போது,
தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்
பிரதான பிரதிநிதிகள் என்ற முறையில்,
மேலும் சிறப்பாகப் பயன்படுத்துகிறேம்.
எனவே, (ஆயுள், தீ விபத்து, ஆள் விபத்து, மோட்டார்,
கடல் அபாயம். திருட்டு போன்றவைக்கான)
உங்கள் காப்புறுதித் தேவைகள் அனைத்துக்கும்
எம்மை நாடுங்கள். எங்கள் பரம்பரைச் சிறப்பின்
பெருமைக்குரிய நம்பிக்கை வாய்ந்த உன்னத சேவையை,
நாம் உங்களுக்கு வழங்குவோம்.

எய்ற்கன் ஸ்பென்ஸ்...
என்றுலே காப்புறுதி!

எய்ற்கன் ஸ்பென்ஸ் அண்ட் கம்பனீ லிமிட்டெட்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பிரதான பிரதிநிதிகள்
315, வக்சோல் வீதி, கொழும்பு 2.
தொலைபேசி: 24604-6. 25400, 23399.

கிளைச் செயலகங்கள்:
கிளேன் இல்லம், 24 கோயில் வீதி, காலி. தொலைபேசி: 09-2083
290, உட் துறைமுக வீதி, திருகோணமலை. தொலைபேசி: திருமலை 453
95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: யாழ்ப்பாணம் 7603

# மீனம்பாக்கம் விமான நிலைய பெயர் மாறும்

புதுடில்லி மார்ச் 23

சென்னை மீனம் பாக்கம் விமான நிலையத்திற்கு பாரதி விமான நிலையம் என பெயர் சூட்டப்படலாம்.

புதுடில்லியில் நடந்த தேசிய ஆலோசனை கமிட்டி கூட்டத்தில் மேற்கண்ட யோசனை தெரிவிக்கப்பட்டது. இந்த யோசனையை சகல கமிட்டி உறுப்பினரும் வரவேற்றனர்.

பாரதத்தில் விமான நிலையத்திற்கு தேசிய தலைவர் ஒருவரின் பெயர் சூட்டப்படுவது இதுவே முதல்தடவையாகும்.

தமிழ்நாடு அரசு தெரிவித்த பலயோசனைகள் இக்கமிட்டி கூட்டத்தில் ஆராயப்பட்டது. (க)

கேள்வித்தாள் வெளியானதால்

# 170 மாணவரும் ஊழியரும் ஒருநாள் தடுப்புக்காவலில்!

சென்னை, மார்ச் 23

சென்னையில் நடந்த பரீட்சையொன்றின்போது தவறுதலாக கேள்வித்தாள் முன்கூட்டியே வெளியானதாலும் 170 மாணவர்களும், பாடசாலைச் சிப்பந்திகளும் அன்றிரவு பாடசாலையில் பொலிஸ் பாதுகாப்புடன் தடுத்துவைக்கப்பட்டனர்.

மறுநாள் வழங்கவேண்டிய தமிழ்மொழி இரண்டாம் பிரிவு கேள்வித்தாள் முதல் நாள் வழங்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதால், மாணவர்களும், சிப்பந்திகளும் அன்றிரவு முழுவதும் பாடசாலையில்நிறுத்திவைக்கப்பட்டனர். அவர்களுக்குப் பகல் உணவும் இரவு உணவும் வழங்கப்பட்டது.

அவர்களுக்கு வழங்கப்பட்ட 2 ம் பகுதி கேள் வி த் தா ள் திருப்பிப்பெறப்பட்டு முதலாம் பகுதி கேள்வித்தாள் வழங்கப்பட்டது. மறுநாட் காலை 2ம் பிரிவுப் பரீட்சை நடைபெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக பரீட்சை இலாகா அதிகாரி ஒருவர் தற்காலிகமாக வேலை நீக்கம்செய்யப்பட்டார். (க)

## பாக். தேசியதினம் இந்தியதலைவர்கள் வாழ்த்து

புதுடில்லி மார்ச் 23

பாகிஸ்தான் தேசியதினத்தையொட்டி பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு பாரத ஜனாதிபதி திரு. சஞ்சீவரெட்டியும் பாரத பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளனர்.

இருநாடுகளும் பரிவுணர்வுடனும், ஒத்துழைப்புடனும் தொடர்ந்து இருக்கும் என பாரத ஜனாதிபதியின் வாழ்த்து செய்தியில் கூறப்பட்டுள்ளது.

துணைகண்டத்தில் தொடர்ந்து அமைதி நிலவ சிம்லா உடன்படிக்கை வழிவகுக்கும் என பாரத பிரதமரின் வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இருநாடுகள் பரிவுணர்வு அதிகரிப்பது சாத்தியமாகுமென்றும் தெரிவித்துள்ளார். (க)

விமான நிலையத்துக்கருகில்

## பஸ் எரிப்பும் கல் வீச்சும்

சென்னை, மார்ச் 23

சென்னை விமானநிலையத்திற்கருகில் பேருந்து ஒன்று தீயிட்டு எரிக்கப்பட்டதனாலும் மற்றும் இரு பஸ்கள் கல்வீச்சிற்குள்ளானதாலும்சுமார் 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்திற்கு அருகில் நின்ற கூட்டத்தினர் பஸ்ஸிலிருந்த பிரயாணிகளை இறக்கிவிட்டு பஸ்ஸிற்குத் தீயிட்டதாகவும், பிரயாணிகள் எவருக்கும் காயமேற்படவில்லையென்றும் சாரதிக்குமட்டும் கல்வீச்சினால் முகத்தில் காயமேற்பட்டதாகவும் மற்றும் இரு பஸ்கள் கல்வீச்சுக்கு இலக்கானதென்றும் கூட்டப்பேரவையில் அமைச்சர் முத்துசாமி தெரிவித்தார். [க]


## தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி

**த பினன்ஸ் கம்பனி**
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
**தங்க நகைகளுக்கும்,**
**த ங் க  க ட் டி க ளு க் கு மா ன**
**ப ண  வ ச தி**
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

விற்பனை முகாமையாளர்,

# த பினன்ஸ் கம்பனி லிமிட்.

**249, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

போன்: 7680


கெற்பேலி கொலை வழக்கு:

# "தண்ணீர்ப்பட்டையை வைத்தபோது முதல் வெட்டு 'விழுந்தது"

## சகோதரன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

சம்பவம் நடந்த தினம் நானும் தம்பியும் தோட்டத்திற்கு சென்றோம். தம்பி தண்ணீர் வார்க்கிறபட்டையை வைக்கும் பொழுது முதல் வெட்டு விழுந்தது.

கெற்பேலி கொலைவழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் சகோதரர் வேலுப்பிள்ளை கணேசு மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1977 ம் ஆண்டு ஏப்ரல் 21 ம் திகதி எஸ். சுப்பிரமணியம், எஸ். இராசதுரை, எஸ். பத்மநாதன் ஆகியோர் கெற்பேலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அரசதரப்பில் அரசசட்டத்தரணி ஐ. ஞானதாசனும், எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி செல்வி செ பொன்னையா, சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி எம். சிவசிதம்பரமும் ஆஜரானர்.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் சாட்சியை குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: நீரும் தம்பியும் எப்பொழுதும் சேர்ந்து தான் தோட்டத்துக்குப் போவது? — ஆம்.

சட்: சம்பவம் நடந்தபின்பு தான் நீர்சென்றீர்? —இல்லை.

சட்: மூன்றுமுறைதம்பிக்கு வெட்டு விழுந்ததென்று பொலிசாருக்கு கூறினீர்? — ஆம்.

சட்: இறந்தவருக்கு 5 வேறு வெட்டுக்காயங்கள் இருந்தன. — ஆம்.

சட்; தண்ணீர் வார்க்கிற பட்டை வைக்கும் பொழுது முதல்வெட்டு விழுந்தது — ஆம்.

சட்: வெட்டியவர் எப்பொழுது ஓடினர்? — நான் குழறியபின்பு.

சட்: கையில் வெட்டுக்காயம் வந்த பின்பு இராசதுரை ஓடினர் என்று பொலிசாருக்கு சொன்னீரா?—இல்லை

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. [மா]

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 11ம் திகதி
புதன்கிழமை
(24—3—82)

மேடம்: குடும்பத்தில் சிறு பூசல் தலை தூக்கும், பெரியவர் ஒருவருடன்அபிப்பிராயபேதம் தோன்றக்கூடும், ஆத்திர உணர்ச்சியால் மோதல்கள் ஏற்படும், அமைதியுடன் இருக்கவும்.

இடபம்: எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி காணப்படுகின்றது, மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புக்கிடைக்கும், எதிர்பாராத இடத்தில் இருந்து பொருள் வரவுக்குஇடமுண்டு, நண்பர்களின் உதவி அவசியம் உண்டு.

மிதுனம்: புத்திரவழியால் புகழ் உண்டு, புதியபாதையில் தடைகள் ஏற்படும், குடும்பத்தில் பிணைப்புக்கள் பலப்படும், பொதுவாக நல்லதினம்.

கடகம்: எக்காரியத்திலும் அதிக கவனஞ் செலுத்துவது விரும்பத்தக்கது, உதவிசெய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்ளலாம், உடல் நலத்தை பேணவும்.

சிங்கம்: இல்லறத்தில் இனிமை தவழும், வெளியிடத்து தொடர்புகள்பெருகும், இனசன உதவிகளுடன் செல்வாக்கு உயரும்.

கன்னி; எதிர்பார்த்த இடங்களில் தடைகள் ஏற்பட்டு வரும், தொழில்துறையில் அவ்வளவு திருப்தியாக இல்லை, நண்பர்களின் நச்சரிப்பு அதிகரிப்பு. பிறந்தகத்தின் ஞாபகம் தலைதூக்கும், அவசரப்போக்கை தவிர்க்கவும்.

துலாம்: இருதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல், பிதா வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், செய்தொழிலும் கிறப்புண்டு.

விருச்சிகம்: தொழில்துறையில் வெற்றி, விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கை பலவுண்டு.

தனு: புதுமையானசம்பவங்கள் நடைபெறும், சிலருக்கு அதிர்ஷ்ட இலாபங்களுக்கும் இடமுண்டு, விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

மகரம்: வழிகளிலும் தொல்லைகள் தோன்றும், விரக்தி மனப்பான்மையுடன் நடமாடுவீர்கள், தொழில் புரியுமிடத்தில் எதிரிகள் மறைமுக நடவடிக்கைகளில் இறங்குவர், அவதானம் வேண்டும்.

கும்பம்: ஆசாரக்குறைவிற்கும் அவசரப் போக்கிற்கும் இடமுண்டு, இன்று அதிக பேச்சை தவிர்த்துக் கொள்ளவும், பூமிப்பிணக்கால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடநேரிடலாம்.

மீனம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம், தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும், அரசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்டதினம்,

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# 6-வது கம்பன்விழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் ஆறுவது கம்பன் விழா இன்று மாலை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றுமுதல் எதிர்வரும் 28 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவிருக்கும் இவ்விழாவில் ஈழத்தின் முன்னணிப் பேச்சாளர்களும், அறிஞர்களும், கவிஞர்களும்கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இன்றைய நிகழ்ச்சிகளுக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி தலைமைவகிப்பார். பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணனை நடுவராகக் கொண்டு 'இராமனுல் மாண்டோருள் வீரம் மிக்கவன் வாலியா? இராவணனு? கும்பகர்ணனு? என்ற பொருளில் பட்டிமன்றம் நடைபெறும். இப்பட்டிமன்றில் வாலியின் சார்பாக திருவாளர்கள் சோ. பத்மநாதன், அ. குமரன், இ. ஜெயராஜ் ஆகியோரும், கும்பகர்ணன் சார்பில் திருமதி வஸந்தா வைத்தியநாதன், திருமதி மனேன்மணி சண்முகதாஸ், திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரும், இராவணன் சார்பில் திருவாளர்கள் க. சொக்கன், க. ந. வேலன், க. உமாமகேஸ்வரன் ஆகியோரும் வாதிடுவர். (க)

# மோசடிகளைத் தவிர்க்க

## திடீர்க் கண்காணிப்புக்குழுக்கள்

(மாவிட்டபுரம்)

வலி.வடக்கு பழை—வீமன்காமம் பகுதியில் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்திற்கு விரோதமாக இடம்பெறும் மோசடிகளைத் தவிர்க்கத் திடீர் கண்காணிப்பை மேற்கொள்வதென பழை—வீமன்காமம் பாவனையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

மாங்கொல்லை சனசமூக நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். ஆர்,ஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

பழை வீமன்காமம்பகுதியில் மோசடிகள், கறுப்புச்சந்தை என்பன மலிந்துவிட்டதால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஆதலால் யாழ். விலைக்கட்டுப்பாட்டுப்பிரிவுப் பரிசோதகர்களையும் அழைத்து அவர்களது உதவியுடன் இப்பகுதியில் திடீர் கண்காணிப்புகளை நடத்தி இச்சட்டவிரோதச்செயல்களை முறியடிப்பதென மேற்படி தீர்மானம் மேலும் தெரிவிக்கிறது.

பாவனையாளர் சங்கங்களின் செயற்பாடு, பாவனையாளர் பாதுகாப்புசட்டத்தை அமுல் நடத்தல். பாவனையாளர்களைப் பாதுகாத்தல்போன்ற விடயங்களை அறிந்துகொள்வதற்கு வசதியாக இதுசம்பந்தப்பட்ட கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து நடத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

## சிறுமியின் ஜிப்சிகள் அபகரிப்பு

(பண்டத்தரிப்பு)

பாலர் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த ஐந்து வயதுச் சிறுமியின் காதிலிருந்த ஜிப்சிகள் பட்டப்பகலில் அபகரிக்கப்பட்ட சம்பவம் மானிப்பாயில் நிகழ்ந்துள்ளது.

மானிப்பாய் அதிபர் செல்லமுத்து வீதியைச் சேர்ந்த கௌரி செல்வராசா என்னும் மேற்படி சிறுமி பகல் 12 மணியளவில் பாலர் பாடசாலையிலிருந்து வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தபோது சைக்கிளில் வந்த வாலிபர் ஒருவர் பிஸ்கட்டை சிறுமியிடம் கொடுத்துவிட்டு காதிலிருந்த ஜிப்சியைக் கழட்ட ஆரம்பித்தபோது சிறுமி கதறி அழுததாகவும் வாலிபர் சிறுமியை பயமுறுத்தி இரண்டு ஜிப்சிகளையும் அபகரித்துக் கொண்டு ஓடி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

சுமார் 750 ரூபா பெறுமதிமிக்க இந்த ஜிப்சிகள் திருட்டப்பட்டதையிட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் தந்தை செல்வராசா

(7ம் பக்கம் பார்க்க)

மாணவரின்
சித்திரக்கண்காட்சி
(கொழும்பு)


## மாணவரின் சித்திரக்கண்காட்சி

(கொழும்பு)

கொழும்பு றேயல் கல்லூரி 12 வயது மாணவன் கல்பகேயின் சித்திரக்கண்காட்சி நேற்று ஆரம்பமானது. (க)

## எரிவாயு உற்பத்தி

[மன்னார்]

மாட்டுச் சாணத்திலிருந்து எரிவாயு உற்பத்தி செய்யும் திட்டம் மன்னார்ப் பகுதியில் பிரபல்யப்படுத்தப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன் மேற்கொண்டு வருகிறார்.


வெஸ்லி [illegible]
தினசரி: 2.30 6.15 9.15
ரஜனிகாந்த்—சீமா
காளி

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — பத்மினி
பேசும் தெய்வம்

யாழ்.றீகல்
தினசரி10—30, 2—00, 6—30, 9—30
தணிமரம்

சாந்தி யாழ்நகர்
தினசரி 4 காட்சிகள்
சுஜதா — கமல்
அவள் ஒரு தொடர்கதை
இந்தியாவிலிருந்து தருவித்த
—புதிய பிரதி—

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
DRAGON PRINCESS
26.ம் திகதிமுதல்
அஜாசத்தா (தமிழ்)

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 2.30
6.30, 9.30
அம்மே மட்ட சமாவென்ன
(சிங்களம் — கலர்)

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:00, 4:30, 7.00 9.45
ROGER MOOR in
THE SPY WHO LOVED ME
JAMES BOND 007
(Passes and Concessions Suspended)
அதிபயங்கரக் காட்சிகள் நிறைந்தது

வெகு விரைவில்
ரஜனிகாந்த் நடித்த
பொல்லாதவன்

கடைசி வாரம்
ராஜா
தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
பிரதாப் சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

2-வது ஜனத்திரள் மாதம்
50-வது நாளைத் தாண்டி 100-வது நாளை நோக்கி
வெற்றிகரமாகப் பறந்துகொண்டிருக்கின்றன
உல்லாசப் பறவைகள்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி
10.30, 2.30, 6.30, 9.30
சிவாஜி - ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ - பத்மினி
குலமா குணமா புதிய பிரதி

வின்ஸர் ஸ்தாபனத்தாரின் மகத்தான
புதுவருட வெளியீடு
26-03-82 வெள்ளி முதல்
சிவாஜி—எம்.ஜி.ஆர்.—கமல்—ரஜனி—நாகேஷ்
ஸ்ரீபிரியா—கே. ஆர். விஜயா
நடித்த
நட்சத்திரம்
(கலர்)


## தவக்கால நற்சிந்தனை



மனிதனை அவனுடைய புறக்கோலத்தின்படியே மதிப்பாயாகில் வெகு சீக்கிரத்தில் மோசம் போவாய். ஆறுதலையும் இலாபத்தையும்பிறரிடத்தில் தேடினுல் அநேகமாய் நஷ்டத்தை மட்டும் காண்பாய். சகலத்திலும் யேசுநாதரைத் தேடுகிறவன் அவரை எல்லா இடங்களிலும் காண்பான். தன்னைத்தானே தேடுகிறவனே தன்னையுந்தான்காண்பான். ஆனுல் அது தனக்குக் கேடாயிருக்கும். ஏனெனில் தான் யேசுநாதரைத்தேடாதிருப்பதால், உலக முழுவதாலும், தன் பகைவர்களாலும் தனக்கு வரக்கூடுமான தின்மையைவிட, தானே தனக்குஅதிக தீங்கு வருவித்துக் கொள்ளுகிருன்.

(கிறிஸ்துநாதர் அனுசாரம்)

## கிரமோதய சபைத் தலைவர்



கொக்குவில் மேற்கு கிராமோதய சபைத்தலைவராக திரு. த. அந்தோனிப்பிள்ளை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் முன்னுள் கொக்குவில் கிராம சபை உபதலைவராவார்.

உயரப்புலம் கடற்றெழிலாளர் சங்கத் தலைவரும் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி நிர்வாக சபை ஆனைக்கோட்டை றோ. க. த. க பாடசாலை அபிவிருத்திச்சபை நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றின் காரியதரிசியாகவும் ஆனைக்கோட்டை ஐ. ச. ச. நிலைய உபதலைவருமான இவர் இக்கிராமத்தின் நீண்டகால சேவையாளரும் சமூகத் தொண்டருமாவார்.

## கடைக்குத் தீவைக்க முயன்றராம்

(மாவிட்டபுரம்)

இரவுநேரம் மண்எண்ணெய் ஊற்றி கடையொன்றை தீவைத்துக்கொளுத்த எடுத்த முயற்சி எதிர்பாராத விதமாக கடைக்காரர் வந்ததால் தோல்வியில் முடிந்ததாம்.

சேந்தாங்குளம் வசந்தபுரம் என்னுமிடத்தில் உள்ள நீ. ம. அருளானந்தம் என்பவருடைய கடையை தீவைத்துக்கொளுத்தத் திட்டமிட்ட மூவர் இரவு 1மணியளவில் கடைக்கு மண்எண்ணெயை ஊற்றி ஓலைகளைப் போட்டு தீவைக்க ஆயத்தமான தாகவும் அந்த நேரம் கடற்றெழிலுக்குச் செல்வதற்காகப் புறப்பட்டு வந்த கடைக்காரரைக் கண்டதும் அவர்கள் ஓடித்தப்பி விட்டதாகவும் காங்கேசன்துறை பொலிசில் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

## கோப்பாய்க் கலாசாலை ஓவியநாடகப் போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி முத்தமிழ் விழாவை யொட்டி இல்ல ரீதியாக நடாத்தப்பட்ட ஓவியப் போட்டி ஆறு பிரிவுகளில் சுவர்ண இல்லம் ஐந்து முதலிடங்களைப் பெற்றுக் கொண்டது.

அருண, ராதா, சுவர்ண ஆகிய மூன்று இல்லங்கள் கலந்து கொண்ட இப்போட்டி மேல், கீழ், மத்தி என மூன்று பிரிவாகக் கருத்து வெளிப்பாடு, அலங்கார வேலைப்பாடு என்ற ரீதியில் நடைபெற்றது.

போட்டி முடிவுகள் வருமாறு:

மேற்பிரிவு — கருத்து வெளிப்பாடு செல்வி கே. சேகும்மா (சுவர்ண), திருபதி மூபிதா நிதாம் (ராதா), திருமதி ஆ. கோசுமுகைதீன் (ராதா)

அலங்காரம்; திரு. பத்மநாதன் (சுவர்ண) செல்வி. செல்லையா கமலேஸ்வரி (ராதா) செல்வி சுமித்திரா வர்ணகுலசிங்கம் (அருண) மெச்சப்பட்டவை செல்வி அ. நிர்மலா (சுவர்ண) திருமதி இ. சந்திரதாஸ் (சுவர்ண) திரு. கு. சரவணபவானந்தம் (ராதா]

கீழ்ப்பிரிவு; கருத்து வெளிப்பாடு செல்வி இ. கே. எஸ். யோகுவா (சுவர்ண) செல்வி பா. இன்பமலர் (சுவர்ண] செல்வி எஸ். பொன்னம்பலம் (அருண)

அலங்கார வேலைப்பாடு செல்வி கே. சேரும்மா (சுவர்ண) திருமதி முபீதாநிதாம் (ராதா) செல்வி மா. ரூபபதி (அருண) திருமதி ஆகோசுமுகைதீன் [ராதா] செல்வி கே. யோகேஸ்வரி (சுவர்ண]

மெச்சப்பட்டது செல்விகள் பி. நாகேஸ்வரி [அருண] மா. ரூபபதி [அருண] திருமதி ஆயிஷாதாலீம் [அருண]

மத்திய பிரிவு: கருத்து வெளிப்பாடு திருமதி தி. இராமச்சந்திரன் [சுவர்ண] திரு. வீரேந்திரன் (சுவர்ண] திரு. ப. செல்லத்துரை (ராதா)

அலங்காரம் திருமதி ப. இராமநாதன் (ராதா) செல்வி தவராணி [சுவர்ண] செல்வி நா. மனோரஞ்சிதம் [சுவர்ண]

மெச்சப்பட்டது திருமதி பூபாலரட்னம் (ராதா) திரு. கே. செல்லத்துரை [சுவர்ண]

பாராட்டு செல்வி சோ. பத்மாசினி [சுவர்ண]

### நாடகப்போட்டி

முத்தமிழ் விழாவையொட்டி இல்லங்களிடையே நடாத்தப் பட்ட நாடகப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை [சுவர்ண இல்லமும் பெண்கள் பிரிவில் அருண இல்லமும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டியில் மொத்தம் ஆறு நாடகங்கள் கலந்து கொண்டன.

சிறந்த நாடகம், காதநாயகன், துணைப்பாத்திரம் பெண் ஆண் பாத்திரங்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

போட்டி முடிவு வருமாறு: ஆண்கள் — கலிபுருஷன் [சுவர்ண] சத்தியேஜெயம் [ராதா] மாணிக்கபரல் [அருண]

சிறந்த பிரதான பாத்திரம் திரு. எஸ். செல்லத்துரை துர்யோதன் [சுவர்ண] திரு, கனகமகேந்திரா அரிச்சந்திரன் [ராதா] சிறந்த துணைப்பாத்திரங்கள் திரு. செ. குணபாலசிங்கம் பீஷ்மர் [சுவர்ண] திரு. அ. வேலுப்பிள்ளை கண்ணன் [சுவர்ண] திரு. எம். தனபாலன் முனிவர் [ராதா)

சிறந்த பெண்பாத்திரம்; திரு. கே. இராமநாதன் சந்திரமதி [ராதா] திரு. சா. சிவராசா குந்தி [சுவர்ண]

பெண்கள் இராஜதர்மம் (அருண] சாரங்கதரன் [சுவர்ண] கலையே உன்விலைஎன்ன? [ராதா]

சிறந்த ஆண்பாத்திரம் செல்வி அ. பாக்கியலட்சுமி (அருண] செல்வி ந. நிர்மலா [சுவர்ண]

பெண்பாத்திரம்: செல்வி இ, நிர்மலா [ராதா] செல்வி பா, இன்பமலர் [சுவர்ண]

துணைநடிகை செல்வி. ச. இராஜஸ்வரி [அருண] செல்வி இ. விஜயகுமரரி [சுவர்ண] [உ]

## நடேஸ்வரா சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கல்வி வட்டாரத்தின் 17 வயதிற்குள் பட்டோருக்கான வலைபந்தாட்டம், கரபந்தாட்டம் போட்டிகளில் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி சம்பியனுகியது.

வலைபந்தாட்ட இறுதிப் போட்டியில் மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலயத்தை நடேஸ்வராக்கல்லூரி 17—1 என்ற புள்ளிகளால் தோற்கடித்தது.

இக்கல்லூரியின் வலைபந்தாட்டத்திற்கு பொறுப்பாசிரியர்களாக திருமதிகள் பரம்சோதி, சவரிமுத்து, ராஜேந்திரம் ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர்.

பதினேழு வயதிற்குள்பட்டோருக்கான கரபந்தாட்ட இறுதிப்போட்டியில் குளமங்கால் மகாவித்தியாலயத்தை நடேஸ்வராக்கல்லூரி தோற்கடித்தது. இக்கல்லூரியின் கரபந்தாட்ட பொறுப்பாசிரியராக திரு. என். நவரட்ணராசா கடமையாற்றி வருகிருர்.

இக்கல்வி வட்டாரத்தின் 19 வயதிற்குள்பட்டோருக்கான வலைபந்தாட்ட இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை இளவாலை கொன்வென்ற் தோற்கடித்து சாம்பியனுனது. (வெ)

## "சுமுக நிலையை ஏற்படுத்துக"

(யாழ்ப்பாணம்)

"யாழ்.நகரில், குறிப்பிட்ட ஒரு பகுதியில் இருபகுதிமக்களிடையே நிகழ்ந்துள்ள சம்பவங்களை அமைதியான முறையில் தீர்த்துவைக்கசகலமுயற்சிகளையும் எடுக்கவேண்டும்" என்று உலக இந்துநல கூட்டு இயக்க மன்றத்தலைவர் சகோதரர் பாலகிருஷ்ணன் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'இச்சம்பவங்களினுல் பலர் உடற்சேதமும், பொருட்சேதமும் அடைந்துள்ளதைக்கவலையுடன் அவதானிக்கின்றேம். இச்சம்பவத்திற்கான காரணத்தை அறிந்து, இருபகுதியினரும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் கலந்து பேசி, சுமுகமான நிலையை ஏற்படுத்த வேண்டும்" என்று சகோதரர் பாலகிருஷ்ணன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தீவைப்பு வழக்கில் எதிரிகள் விடுதலை

(சாவகச்சேரி)

தாளையடி தீவைப்பு வழக்கில் எதிரிகள் விடுதலைசெய்யப் பட்டனர். இவ்வழக்கு பளை கற்றுலா நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் தாளையடியைச் சேர்ந்த ஒப்பிலாமணி, மாசிலாமணி, பஞ்சலிங்கம் திரவியம் ஆகியோர் 81 ஏப்ரல் 24ல், சின்

(7ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியில், 2½ பரப்புக்காணி, மூன்று அறைகளைக்கொண்ட புதியகல்வீடுவிற்பனைக்குண்டு. காணிக்குத் தனியான பாதையுண்டு. விபரங்கட்கு: சி. சுப்பிரமணியம், நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
2624

இறக்குமதி செய்யப்பட்ட துணி வகைகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. 4, பேரின்பநாயகம் ஒழுங்கை, சுண்டிக்குளி, (2626)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் ''வேல்சினிமா'' படமாளிகை உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: குயிக் ரவல்ஸ் அன் ரூர்ஸ், சரஸ்வதி பூங்கா, சாவகச்சேரி. தொலைபேசி: 273. (2625)

## தவறிவிட்டது

ஹொண்டா மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு ஒன்று [Number Plate] பலாலி ரோட்டில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து 37, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
2623

நிசான்டயறியுடன் லைசன் புத்தகம் முக்கிய கடிதங்களும் கைதடி நாவற்குளிக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். K. ருசேந்திரம், விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
2633

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு வியாபார அனுபவத்துடன் ஆங்கில அறிவும் மின்சார உபகரணங்களைப் பற்றிய அறிவுமுள்ள முப்பது வயதுக்குக் குறைந்த ஆண்கள் தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் உறவினரல்லாத இருவரின் நற்சாட்சிப்பத்திரங்களுடன் 29—03—82 க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2632, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
[2632]

## பயிற்சி

French - German வகுப்புக்கள் ஆரம்பம் 29-3-82 குறுகிய காலத்தில் இலகு முறையில் கற்பிக்கப்படும். இருபாலாரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, [விவேகானந்த அச்சகம் முன்பாக] 11, மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். (2635)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் தொல்புரம் சுப்பையா அம்பலவாணரின் மரணசாதனமில்லாத சொத்தின் விடயத்தில்.
மரணமெய்தியவர்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. ரீ/ 3652

அப்புக்குட்டி நடராசா கைம்பெண் இராசம்மா, தொல்புரம், யாழ்ப்பாணம், தற்பொழுது கோலாலம்பூர் மலேசியா அவவின் தத்துவக்காரன் வயித்திலிங்கம் அம்பலவாணர் தேரியன் தோட்டம், சுழிபுரம், யாழ்ப்பாணம்.
—மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேல் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு சித்திரை மாதம் 2ஆந் நாளன்று முற்பகல் 9.00மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
[ஒப்பம்]
தா. குலஞானம்
பதிவாளர்

1981ம் ஆண்டு மாசி மாதம் 8 ஆந் நாளன்று இன்று தேதியிடப்பட்டது.

இது ஒரு உண்மைப்பிரதி
பொ. நவரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி
2610

## சிறுமியின்..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடு செய்துள்ளார்.

இருவாரங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் பட்டப்பகல் நேரத்தில் வீதியால் வந்து கொண்டிருந்த சிறுமியின் காதுத் தோடுகள் இரண்டு இதேபோல அபகரித்துச் செல்லப்பட்டதும் இதன் எதிரொலியாக தங்களது பிள்ளைகளை தனியே பாலர் பாடசாலைகளுக்கு அனுப்ப பெற்றோர் பெரிதும் அஞ்சுகின்றனர்.

## தீவைப்பு....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

னையா சிவலிங்கம் என்பவரின் வீட்டிற்கு தீயிட்டதாககுற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆஜரானார். வழக்காளி சார்பில் சார்ஜன்ட் வி. செல்லையா வழக்கை நடத்தினார். (க)

## விற்பனைக்கிளை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயிலுள்ள விற்பனை அபிவிருத்தித் திணைக்களப் பகுதியினர் மானிப்பாய் மருததடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆலய வீதியில் விற்பனைக்கிளை நிலையம் ஒன்றை இம் மாதம் 29ம் திகதி ஆரம்பிக்கவுள்ளனர். இங்கு மக்களுக்கு நிதான விலையில் மரக்கறி வகைகள், உட்படபலபொருட்கள் விற்பனை செய்யப்படும்.

## வலி கிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி

## வெற்றுச்சாக்கு விற்பனை

வலி.கிழக்கு வடபகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் (அச்சுவேலி) தரம் பிரிக்கப்பட்ட சுமார் 6005 சாக்குகள் (ஆறாயிரத்து ஐந்து) விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் கேள்விவைப்புப் பணமாக நூறும் மீளத்தகாத பணமாக ரூபா ஐந்தும் காரியாலயத்தில் 28.3.82ந் திகதிக்குமுன் கட்டி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களை 31.3.82ந் திகதிக்குப்பிந்தாமல் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

விண்ணப்பிக்கும்போது என் வலப்பில் இடதுபக்கமூலையில் 'வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்' என்று குறிப்பிடல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
வலி கிழக்கு வ. ப.
ப. நோ. கூ. சங்கம்,
2436 அச்சுவேலி.

## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சோலைவரி 1-ம் கந்தாயம் 1982

1982—ம் ஆண்டு 1—ம் கந்தாயத்திற்கான சோலை வரிப்பணம் 31—3—82—ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3—00 மணிக்கு முன்பதாக மாநகராட்சி மன்றப் பணியகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் வரும் விபரங்களின் படி வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

வெற்றுக்காணிகள்,
குடியிருப்புக் காணிகள்
15% வீதம்.
இவையல்லாத காணிகள் — 20% வீதம்

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன ''யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். அப்படியாக அனுப்பப்படும் பொழுது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரி மதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணமாக அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
22—3—82. (2631)

# வாழைச் சேனையில் புதிய இ. போ. ச. டிப்போ

(மட்டக்களப்பு)

வாழைக்சேனையில் புதிதாக இ. போ. ச. பஸ் டிப்போ ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. அதே நேரத்தில் கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய இடங்களிலுள்ள டிப்போக்கள் உலக வங்கியின் உதவியுடன் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. கட்டிட விஸ்தரிப்பு வேலைகள் மத்திய போக்குவரத்துச்சபையின் நிதி கிடைத்ததும் ஆரம்பிக்கப்படவிருப்பதாக கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் ஜனாப் முகமட்அலி தெரிவித்தார்.

கிழக்குப் பிராந்திய இ. போ. சபையின் விஸ்தரிப்பு வேலைகள் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மூதூர் இறங்குதுறை வேலைகள் பூர்த்தி அடைந்ததும் இ. போ, சபையினால் படகுச்சேவை ஆரம்பிக்கப்படவிக்கிறதாகக் கூறினார்.

# ஊறணி மாதிரிக்கிராமம்: பிரதமர் திறந்துவைப்பார்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள சின்ன ஊறணி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 30 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராம வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளதாகவும் மாதிரிக்கிராமத்தை பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா விரைவில் திறந்து வைப்பார்கள் என்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் திரு. ரி. தவராசா தெரிவித்தார்.

ஆரம்பத்தில் இவ்வீடமைப் புத்திட்டம், சுயஉதவி வீடமைப்புத்திட்டமாகவே ஆரம்பிக்கப்பட்டபோதிலும் பின்னர் மாதிரிக்கிராமமாக மாற்றப்பட்டு வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் வீடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மட்டக்கயப்பு டச்பார் சுய உதவி வீடமைப்புத்திட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் மற்றும் டச்பார் மீனவர் குடியேற்றத்திட்டத்தில் அமைக்கப்பட்ட 62 வீடுகளும் பூர்த்தி அடைந்துள்ளதாகவும் இவை விரைவில் குடியிருப்பாளர்களுக்கு கையளிக்கப்படும் என்றும் மாவட்ட முகாமையளர் தெரிவித்தார்.

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

(மாவிட்டபுரம்)

மாங்கொல்லை இளைஞர் முன்னேற்ற மன்ற சன சமூகநிலைய ஆண்டுவிழாவை முன்னிட்டு விளையாட்டுப்போட்டிகளையும், கலை, கலாசார நிகழ்ச்சிகளையும் நடத்த நிலையம் தீர்மானித்துள்ளது.

நிலையத்தின் கூட்டம் நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. சி. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது ஆண்டுவிழா ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டன.

## லதா 30 ஆயிரம் பாடல்களைப் பாடியுள்ளார்

புதுடில்லி, மார்ச், 23

பிரபல பாடகி லதா மங்கேஸ்கர், இதுவரை 30,000 பாடல்களைப் பாடியுள்ளார். 1974ம் ஆண்டு அவரது புகழ் உச்சியிலிருந்த காலத்திலிருந்து 1,800க்கு அதிகமான திரைப்படங்களில் பாடியுள்ளார். 1 பாடலுக்கு 25,000 ரூபா பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

1948ம் ஆண்டு முதல் 1974ம் ஆண்டுவரை 25,000 பாடல்களை பாடியுள்ளார் என்றும், இவரே அதிகமான பாடல்களைப் பாடியிருப்பதாகவும் புள்ளி அறிக்கை ஒன்று கூறுகிறது.

எத்தனை பாடல்களை பாடினார் எனத் தனக்கே தெரியாதென பாடகி லதாமங்கேஸ்கர் தெரிவித்துள்ளார். (க)

## யாழ். முஸ்லிம் மாணவர் நலன்புரிச்சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் மாணவர் நலன்புரிச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

க. பொ. த. சாதாரணம்—உயர்தரம் பிரத்தியேக வகுப்புகளை இலவசமாக நடத்துவதென்றும் உயர்கல்விபெற வசதியற்ற மாணவர்களுக்கு சகாயநிதி வழங்குவதென்றும் வேலையற்றிருக்கும் படித்த வாலிபர்களுக்கு தொழிற் பயிற்சியளிப்பதென்றும், அங்குரார்ப்பணக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டம் கடந்தவாரம்மீரானியாக் கல்லூரியில் நடைபெற்றது.

ஜனாப்கள் கே. என். எம். மீரான் சாஹிப், மொஹிதீன் ஏ. காதர், ஏ. ஸி. மரைக்கார் ஆகியோரைப் போஷகர்களாகக் கொண்ட யாழ். முஸ்லிம் மாணவர்கள் நலன்புரிச்சங்கத்தின் ஆலோசகர்களாக ஜனாப்கள் எம். எம். மன்சூர் பாஷா முஹிதீன் பிச்சை: ஜமாலி, அப்துல் றஸாக் ஆலிம் ஆகியோர் இடம்பெற்றனர்,

நலன்புரிச்சங்க நிர்வாகிகள் வருமாறு:

தலைவர் எம். எவ். எம். அக்பால். உபதலைவர் ஏ. ஏ. ஜெசூர். செயலாளர்: எம் பி. சுரபுல் அனும். உபசெயலாளர்: ஏ. ஸி. முஹம்மது ஐயூப். பொருளாளர்; எம். எஸ். எம். காமுல். உறுப்பினர்கள்: எம். ஏ. ஸி. மாஹிர், ஏ.எல். சுபுஹான், ஏ. ஸி. முஹம்மது ஹல்மி, ஏ. முஸல்லிம்.

## இன்று ரதோற்சவம்

[காரைநகர்]

காரைநகர் மணற்காடு ஸ்ரீ மாரி அம்மன் கோவில் ரதோர்சவம் இன்று காலை பத்துமணிக்கு நடைபெறும்.

## இந்தியா அதிக ஆயுதம் வாங்கும்

புதுடில்லி, மார்ச் 23

இந்திய பாதுகாப்புச்சேவை சம்பந்தமாக கூடுதலான ஆயுதங்களை கொள்முதல் செய்ய இந்தியா தீர்மானித்துள்ளது.

இராணுவ செலவீன மதிப்பீடு பற்றி மாநகர மன்றத்தில் சமச்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது.
[க]

## மூன்று புதிய முத்திரைகள்

புதுடில்லி மார்ச் 22

லண்டனில் நடைபெறும் பாரத திருவிழாவையொட்டி 3 முத்திரைகள் வெளியிடப்பட்டுள்ளன. புதுடில்லியில் வெளியிடப்பட்ட இம்முத்திரைகள் இரண்டில் புராதன சின்னங்களும் ஒன்றில் விஞ்ஞான தொழில் நுட்ப சின்னங்களும் இடம்பெற்றுள்ளன. [க]

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்
வருடாந்த மகாசபைக் கூட்டம்
28-3-82

மேற்படி தேவஸ்தான வாக்காளர் மகாசபைக்கூட்டம் எதிர்வரும் 28-3-82-ந் திகதி காலை 10-00 மணிக்கு தேவஸ்தான முன்றலில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
சந்தாப்பணம் செலுத்திய சகல மகாசபை உறுப்பினர்கட்கும் கூட்ட அறிவித்தல் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.
அறிவித்தல் கிடைக்கப்பெறுதவர்கள் என்னுடன் தொடர்பு கொள்ளும்வண்ணம் வேண்டிக்கொள்கின்றேன்.

டாக்டர் சு. கதிரேசு,
செயலாளர்,
தர்ம பரிபாலன சபை.
(2637)

# பின்தங்கிய பகுதிகளில் கடமையாற்ற ஆசிரியர்கள் முன்வரவில்லையாம்!

## யாழ். அபிவிருத்திசபை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளில் சேவையாற்றுவதற்கு ஆசிரியர்கள் முன்வராததால், அப்பகுதி மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.**

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்றபோது உறுப்பினர்கள் பலர் இப்பிரச்னைகுறித்து ஆராய்ந்தனர்.

அபிவிருத்திசபை நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், சபையின் முதலாவது உறுப்பினருமான திரு. எஸ். நாகராசா தலைமையில் இக்கூட்டம்நடைபெற்றது.

எம்.பிக்களில் திரு. எம்.சிவசிதம்பரம், திரு.வெ.யோகேஸ்வரன் ஆகியோரும் உறுப்பினர்களில் திருவாளர்கள்: ந.இராஜேந்திரம், எம். தம்பிமுத்து, அழகையா, க. சின்னத்துரை, க. நடேசு, க. சோமசுந்தரம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

யாழ். மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளான கிளிநொச்சி, வடமராட்சி கிழக்கு, தீவுப்பகுதி ஆகிய இடங்களில் சேவையாற்றுவதற்கு ஆசிரியர்கள் முன்வராததால் அப்பகுதி மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறதென்றும் இப்பகுதிகளில் கடமையாற்றுவதற்கு ஆசிரியர்களைத் தூண்டும் முகமாக அவர்களுக்குக் கஷ்டப்பிரதேசப்படி அல்லது மேலதிக வேதனம் போன்ற ஊக்குவிப்புகள் வழங்கப்படவேண்டும் என்றும் அப்பகுதிகளில் சேவையாற்றுவதற்கென அவ்வப்பகுதியைச் சேர்ந்தவர்களை சேவையில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் பிரேரணை ஒன்றை திரு. எம். தம்பிமுத்து கொண்டு வந்திருந்தார்.

இப் பிரேரணையை ஆதரித்து திரு. ந. இராசேந்திரம் உரைநிகழ்த்துகையில், யாழ் மாவட்டம் பூராவுமே ஆசிரியர் பற்றுக்குறை நிலவுகிறது. இப்பற்றுக்குறையை நிவர்த்தி செய்ய ஆசிரியர்களை பற்றுக்குறை நிலவும் பகுதிகளிலேயே நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

''தீவுப்பகுதியை பிறப்பிடமாகக்கொண்ட ஒரு ஆசிரியருக்கு தீவுப்பகுதியிலேயே இடமாற்றம் கிடைத்தும், அவர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கு திரும்பவும் இடமாற்றம்கோரி கல்வித் திணைக்களத்துக்கு வந்திருந்தார்'' என்று திரு. இராஜேந்திரம் தெரிவித்தார்.

பற்றும் அங்கத்தவர்களும் உரையாற்றினர்.

இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் பிரதிகள், இ. த. ஆ. சங்கம், கல்விச் சேவை ஆணைக்குழு ஆகியவற்றுக்கும் அனுப்பிவைப்பதென முடிவுசெய்யப்பட்டது. [மா]


ஹோம் பினன்ஸ்

லிமிட்.

திறமைமிக்க டெலிவிஷன்

SANYO — T. V. BLACK AND WHITE

திரை 14'', 20''

திடகாத்திரமான

சைக்கிள்கள் (HELMET) -தொப்பிகள்

'HOME MATE' வீட்டுப் பாவனைக்குகந்த

மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும்

மின் பம்புகள்

கட்டுப்பணமுறையிலும் பெறலாம்

ஹோம் பினன்ஸ்

லிமிட்.

இல. 82, கன்னுதிட்டி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 8310


## பொலிஸார்மீது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொலைசெய்யப்பட்டவர் பல வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் என்றும், பொலிசார் புலன் விசாரணையை மேற்கொள்வதாவும், இச்சம்பவம் தொடர்பாக, சந்தேகநபர் ஒருவர் சரணடைந்துள்ளதாகவும், சபையில் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குஅனுமதி மறுக்கப்பட்டது. (க)


மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் வழங்கும்

புத்தாண்டுச் சலுகை!!

இன்றே ஹொண்டா மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கி இலாபமடையுங்கள்!

ஏப்ரல் 15-ந் திகதிவரை அரிய சந்தர்ப்பம்!!!

| | | புதிய விலை | எமதுவிலை | இலாபம் |
|---|---|---|---|---|
| ஹொண்டா | C 90 | ரூ. 15,800 | 12,510 | 3290 |
| ஹொண்டா | CD 50 | ரூ. 14,500 | 12,150 | 2350 |
| ஹொண்டா | CD 125 T | ரூ. 24,000 | 19,800 | 4200 |
| ஹொண்டா | CB 125J X | ரூ. 22,000 | 17,010 | 4990 |

கையிருப்பு சொற்பம்! விற்பனைக்கு பிந்திய பராமரிப்பு சேவை!!

விபரங்களுக்கு:

விற்பனை முகாமையாளர்,

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்,

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8267


மாட்டுவண்டில் சவாரி :

# போட்டி பார்க்க சென்றவர் விபத்தில் சிக்கினர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நடைபெற்ற மாட்டுவண்டில் சவாரிப் போட்டியைக் கண்டுகளிக்கச் சென்ற அளவெட்டியைச் சேர்ந்த எம். கைலேசையா, விபத்தில் சிக்கி படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இன்று அவருக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

''ஈழநாடு'' அச்சகப்பகுதி ஊழியரான இவர், கடந்த ஞாயிற்றுக்கிழமை, வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் பிரயாணச்சீட்டு பரிசளிப்பு விழாவின் ஒரு நிகழ்ச்சியாக நடைபெற்ற மாட்டுவண்டி சவாரிப்போட்டியைப் பார்க்கச் சென்றிருந்தபோது மாட்டுவண்டியொன்று பாதையை விட்டுவிலகியதாகவும் அந்த வண்டியின் சில்லு இவரது காலின்மீது ஏறியதால் விபத்து நிகழ்ந்து காலில் முறிவு ஏற்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கள் அருந்தி மரணமானவர்கள்:

# 'சங்கம் விபத்துநிதி வழங்க வேண்டும்'

## அபிவிருத்திசபை கூட்டத்தில் அங்கத்தவர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

''அச்சுவேலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆவரங்கால் விற்பனைக் கிளையில் கள் அருந்தி மரணமானவர்களுக்கு மேற்படி சங்கம் விபத்து நிதி வழங்குவதற்கு, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று திரு. க. சின்னத்துரை யாழ்.மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்.

மேற்படி சங்கத்தின் ஆவரங்கால் கிளையில் கள் அருந்திய சுமார் 15பேரில் இருவர்மரணமடைந்தனர் என்றும் மற்றையோர் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளனர் என்றும் குறிப்பிட்ட திரு. சின்னத்துரை இறந்த இருவரும் சாதாரண தொழிலாளிகள்என்றும் இவர்களில் ஒருவர் புத்தூர் கிராமாட்சிமன்றம் இயங்கியகாலத்தில் ஒரு அங்கத்தவராக இருந்தவர் என்றும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட சங்கக்கிளையில கள் அருந்தியே இருவரும் இறந்தனர் என்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்திருப்பதால், விபத்து நிதிவழங்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினர்.

இப்பிரச்னை சம்பந்தமாக தெ. ப. உ. வி. கூ. சங்கசமாஜத் தலைவரும் அபிவிருத்தி சபை உறுப்பினருமான திரு. க. நடேசு பேசஎழுந்தபோது சபையின் பதில் தலைவர் திரு. எஸ். நாகராசா குறுக்கிட்டு, அபிவிருத்தி சபைத் தலைவர் இல்லாததால், அடுத்த கூட்டத்தில் இத்தீர்மானம் குறித்து ஆலோசிப்போம் என்று ஒத்திவைத்தார். (மா)

## 16 பொலிஸார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்குமல்லாகம்நீதிமன்றத்தில் கடந்ததவணை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேற்படி பதினறு பொலிஸாரும் சமுகமளிக்காததால்அவர்கள் அனைவர்மீதும் பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டு நேற்றுவரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி. வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 16 பொலிஸாருப் ஆஜராகாததைத் தொடர்ந்து அவர்கள் மீது நீதிபதி பிரசித்த பிடிஆணைபிறப்பித்தார்.

## 5 இந்திய மீனவர் கைது

(மன்னர்)

தலைமன்னர் கடல் பிராந்தியத்தில் இருல் பிடிக்கவென பிரவேசித்த இந்தியஇழுவைப் படகொன்றை இராணுவத்தினர் கைப்பற்றியதுடன்5இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட இந்திய இழுவைப்படகும், கைது செய்யப்பட்ட5இந்தியமீனவர்களும் தலைமன்னர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## மரணஅறிவித்தல்

### திருமதி தங்கசாமிஐயா இராஜேஸ்வரி

திருமதி தங்கசாமி ஐயா இராஜேஸ்வரி காலமானர். இவர் தங்கசாமிஐயா [வேலைப்பகுதி அத்தியட்சகர் கொலன்னுவ நகரசபை] வின் அன்பு மனைவியும் வி. இ. சுப்பிரமணியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், செல்வராஜா [லண்டன்], திருமதி மகாதேவன் நீலாயதேவி, வில்வராஜா [லண்டன்], பரமராஜா [சட்டத்தரணி], குலசேகரம் [லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 25-3-82 வியாழக்கிழமை காலை ஒன்பது மணிக்கு அன்னரது இல்லத்தில் நடைபெறும்.

''திலகவாசா''

புன்னலைக்கட்டுவன் வடக்கு,

புன்னலைக்கட்டுவன்.

2650

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. The General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna தொலைபேசி: 77 07, 389, 8126.